உ
சிவமயம்



யாழ்ப்பாணம் தென்மராட்சி உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்டவரும்
மனித விழுமியங்களுக்கு மதிப்பளித்து மனிதநேயத்துடனும்
மாண்புடனும் வாழ்ந்துவரும் காலம் சென்ற அமரர் திருமதி.நவமணி
அவர்களின் இனிய நற்துணைவருமான

# அமரர் வாரித்தம்பி சின்னத்துரை

அவர்களின் மோட்சப் பயணம் இயம்பும்.

## நீங்கா நினைவுச் சிமிழ்.


## 10.08.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்.



யாழ்ப்பாணம் தென்மராட்சி உசன் மிருசுவிலைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும்
காலம் சென்ற அமரர் திருமதி.நவமணி அவர்களின்
இனிய நற்துணைவருமான

# அமரர் வாரித்தம்பி சின்னத்துரை

அவர்களின் மோட்சப் பயணம் இயம்பும்.

# நீங்கா நினைவுச் சிமிழ்.

## 10.08.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மற்றவர்க்கு நோவின்றி வாழ்ந்த பண்பாளன்
பாசமுடன் எங்ளகனைவரையும் காத்த காவலன்
எங்கள் மனங்களில் என்றும் வாழும் எமது அன்பு ஐயா
அமரர் திரு.வாரித்தம்பி சின்னத்துரை அவர்களுக்கு.

## இந்நூல் சமர்ப்பணம்

புன்னகை பூத்த திருவதனம்
என்நாளும் இனிமையுடன் பேசி
தன்னலமே இல்லாத சேவையுள்ளம்
இன்பமுடன் எல்லாரும் வாழவெண்ணியவர்

குலம்காத்த எங்கள் கோவே!
குடும்பத்தின் மங்காத ஒளிவிக்கே!!
கண்கள் குளமாகக் கலங்குகின்றோம்
கண்ணீர் வடிக்கின்றோம் கருணைத்தெய்வமே.

அன்னையைப் பிரிந்து ஆண்டொன்றாகவில்லை
எண்ணாத நேரத்தில்ஏங்க வைத்தெமைப்பிரிந்தீர்
வாசமலர்ப் பாமாலை செய்து
நேசமுடன் நினைவு கூர்ந்து
பாசத் தலைவரும் பாதங்களில்
கண்ணீரால் அஞ்சலித்து காணிக்கையாக்குகின்றோம்.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"
என்பதற்கிணங்க வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்து வளம்பல கண்ட

அமரர்

# திரு.வாரித்தம்பி சின்னத்துரை

அவர்கள்

| பவத்தில் | சிவத்தில் |
| --- | --- |
| 09 - 08 - 1933 | 11 - 07 - 2009 |



## திதி நிர்ணயம்

ஆண்டுநிகழ் விரோதிதனில் ஆனமதி ஆனியிலே
பூண்டதிதி சதுர்த்தி தேய்பிறை - நீண்டபுகழ்
பூத்ததிரு சின்னத்துரைச் செம்மல் பூவுலகை
நீத்திறைவன் தாளடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினர் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## தேவாரம்

தந்தையார் போயினார் தாயாரும்
போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண் டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம்
வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்ய லாம்
மையல் கொண் டஞ்சல் நெஞ்சே.

## திருவாசகம்

உற்றாரை நான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவு மணியமையுங்
குற்றாலத் தமரந்துறையுங் கூத்தாகும் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பானித் தருவே
ஐயா நீயுலாப் போந்தவன்று முதலின்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள் கோடைத்திரை போக்கிய சுந்தரனே

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான் முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்புவேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் - உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்அடியின்கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமோ டவல் பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மென வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோ னே
முப்புரம் எரிசெய அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

# திருமந்திரம்

## வழிபடுதெய்வங்களின் திருவடி தொழுதேற்றி மாண்புமிகு வாரித்தம்பி சின்னத்துரை அவர்களுக்கு அவர்வழிபட்ட குலதெய்வங்களின் மீது பாடிய பராவல் பாக்கள்.

## அருள்மிகு கஜகேணிப்பிள்ளையார்.



அன்பு செய்யும் அடியவர்க்கு அருளைத்தந்து
அல்பகலும் கஜகேணி அருகிருந்து காத்து
இன்பமுற வாழ்வளிக்கும் இனிய தேவா
எழில்யானை முகத்தோனே எமைக்காப்பாய்!
துன்பதுயர் தான்தாங்கி சுற்றம் காத்தோன்.
தூயநல் உள்ளம்கொண்ட தூயவன் சின்னத்துரை
மன்பதை வாழ்வொழித் துன்னைச் சேரவென்றும்
மானடிகள் பணிய வந்தார்.தாங்குவீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு மெய்யாங்கேணிப்பிள்ளையார்.

சீர்மலியும் திருவூராம் தவசிகுளம் சிற்றூரில்
திருமலியும் மெய்யாங் கேணியருகில் கோவில்கொண்டு
பேர்மலிந்த ஊர்மக்கள் பெரிதும் போற்றும்
பிறவிநோய் பிரிவதற்கு வழியைக் காட்டும்
கார்குழலி உமைமைந்த கணபதியே காப்பாய்
காலனவன் கவர்ந்த எங்களன்பு சின்னத்துரைஐயா
பார்புகழ வாழ்ந்தவர் உன்பாதம் வந்தார்
பாதுகாத் தமைதிபெறச் சாந்தி மீவாய்.

## அருள்மிகு உசன் கந்தசாமிக் கடவுள்.

ஆனைமுகன் தம்பியே ஆறுமுக வேலழகா
அரியதந்தைக்கு உபதேசம் அளித்த தேவா
மானைநிகர் தெய்வயானை வள்ளி மணவாளா
மாண்புநிறை உசன்பதியில் மகிழ்ந்தே அமர்ந்தோன்
தானமொடு தவம்பெருக்கி தலைபணிந் துனைவணங்கி
சீலம்நிறை வாழ்வுகண்ட செம்மல் சின்னத்துரை
தேனலரும் திருத்தாள் தேடிவந்தான் தேவதேவே
திசைவிளங்க அன்னவரைக் காத்தருளை மீவாய்.

## அருள்மிகு உசன் வீரபத்திரர்.

தேன்சொரியும் மலர்கொண்டு திருவடிகள் துதிசெய்தான்
திருமகனாம் செம்மல் சின்னத்துரை தீபமானான்
வானுலகில் வாழும் மான்புமிகு தேவா
வரமளித்து சாந்திபெற வழிசெய்வாய் அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு நாச்சிமார்.

புகழ்பூத்த மெய்யாங்கேணி விநாயகர் அருகிருந்து.
அகம்மகிழ அனைவர்க்கும் அருள் அளிக்கும்
நாச்சிமாரே நாளுமுனை வணங்கியநாயகன் சின்னத்துரை
ஆச்சரியப் படலைத்து அருகுவந்தான் அருளுவாயே.

## அருள்மிகு புதுகுளத்தம்மன்.

பூர்வீக வரலாறு பலவும் கொண்ட
பொற்பதியாம் விடத்தற் பளையில் கோவில்கொண்டு
ஆர்வமொடு தொழுது வருமடியார்க் கெல்லாம்
அருள்மாரி பொழிந்தருளும் அற்புதத்தி!
கார்சுமந்த கருங்கூந்தல் கண்ணகையே
கற்பரசி காவலர்கே அன்று
ஓர்நீதிகற்பித்தாய் உன்னையேநம்பிய சின்னத்துரை
உபயபதம் ஓடிவந்தான் அபயம் ஈவாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களனைவரதும் நெஞ்சங்களை நெகிழவைத்து உலகுதுறந்த உத்தமர் அமரர் திரு.வாரித்தம்பி சின்னத்துரை அவர்களின் வாழ்க்கைச் சரித்திரக்கவிதை.

பண்ணிசை பாடும் யாழ்நகர் தென்பால்
தென்மராட்சி சீர்பெறு உசனெனும் பதியில்
குறிஞ்சி, முல்லை, மருதமென்னும் மூவகைவளம் கொண்ட
தித்திக்கும் முக்கணிகள் தரும் விருட்சங்கள் மலிந்து
எத்திக்கும் உயர்ந்து வளர்ந்த தெங்கு பனைகளும்
நித்தமும் சைவமணம் கமழும் கந்தக்கடவுழுறைகோவிலும்
நல்லதிபர்கள், நல்லாசிரியர்கள், தொழில்கள் நிபுணர்கள்
எல்லாரும் வாழ்ந்த வாழுகின்ற இனியஇத் திருபதியில்
பார்புகழ வாழ்ந்த பண்புக்குரிய வாரித்தம்பி என்மார்க்கும்
ஊர்அறிந்த உத்தமி அன்னவர் மனைவி செல்லம்மாவுக்கும்
இல்லறவாழ்வின் இனியநற் பலனாய் பிறந்தவர் நால்வர்.
நால்வரில் இளையவரே இம்மலருக்குரிய அமரர் திரு.சின்னத்துரை
மற்றய மூவரின் தரணிநீத்த பொன்னையா நாகமுத்து அன்னபூரணம்
பெற்றவர் மகிழ பேராசிரியை ஆகினார். வாலாம்பிகை
மேற்படி நால்வரும் சின்னத்துரையின் உடன்பிறப்பாகினார்.

நல்லழகுடன் நல்லாரோக்கியம் மிக்க சின்னத்துரை சிறுவனாகி
கல்விகற்க சென்றனன். உசன் இராமநாதன் வித்தியாலயம்
வாழ்க்கைக்கு வேண்டிய வளம் தரும் கல்வியைப் பெற்ற பின்
அன்னை தந்தைக்கு அருகிருந்து உதவிகள் செய்தவர்
வன்ன வனப்புடன் வளர்ந்து வாலிபன் ஆகினார்.
சின்னத்துரைக்கு சிறப்புடன் திருமணம் செய்ய விரும்பி
இவ்வூரில் சிறப்புடன் வாழ்ந்த விநாசித்தம்பி செல்லம்மா
தம்பதிகளின் தவப்பேறால் பெற்றநற் புதல்வி நவமணி
என்னும் நங்கையை இல்லறவாழ்வில் இணைத்தனர் பெற்றோர்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதுமணப் தம்பதிகள் புதுப்பொலிவோடு நல்லாசிகள் பெற்று**
**புதுமைகள் நிறைந்த இல்லறவாழ்வின் இனியநற்பலனினால்**
**"மங்களமென்பல மனைமாட்சி மற்றதன் நன்கலம்**
**நன்மக்கள் பேறுஎன்று" வள்ளுவன் வகுத்தபடி**
**நல்மக்களில் மூத்தோனாக நானிலம் சிறக்க கேதிஸ்வரனும்**
**வல்லமைமிக்க யோகேஸ் மனைசிறக்க மகள் பவானி,**
**முனீஸ்வரன், கருனாகரன் கோமதி, திருகரன் என்போர்**
**ஒருகொடியில் எழுமலராய் பிறந்ததினால் மகிழ்ந்தனர் பெற்றோர்.**

அன்புடன் அகமகிழ்ந்தே பெற்ற பிள்ளைகளனைவர்க்கும்
இன்பமுடன் காலத்தால் அழியாத கல்வியை அளித்து
திரைகடல் ஓடியும் திரவியம் தேடென்பதற்கேற்ப
கேதீசுடன், கருணாகரன், கோமதி, திருகரன், கனடாவிலும்
மகன் முனீஸ்வரன் முத்தான நாடாம் சுவிசிலும்
மற்றும் இருவரில் யோகேஸ்வரனுடன் புத்திரி பவானியும்
பெற்றவரை பேணும் பாக்கியம் பெற்றதால்
முன்னவர் மூவிருமக்கட்கும் முத்தான மருமக்களாக
சிவச்செல்வி, சிவராணி, நிர்மலாம்பிகை,கேமலதா என்பாரும்
அருண்புடவையகத் துரிமையாளன் அருணாசலத்தன்பனுடன்
பார்த்தீபன் என்னும் பண்பாளன் ஆகியோர் மருமக்களாகினர்.

அன்பும் பண்பும் கொண்ட உன் மக்களின் திருமணப் பேறால்
துவாரகா, மிதுரா, துசானி. யதூாபிகா, தாருகாவுடன்,
அணோசன், அர்ச்சயன், அகல்சன், ஜெனிசன் மற்றும்
பிரணவன், பிரவீனா, ஜனனி, சங்கவி, டிதேனுகா
பிருந்தாபன் என்னும் பேரப்பிள்ளைகள் மூவைந்து பேரை
கண்டனர் கடவுள் பக்திமிக்க சின்னத்துரை தம்பதிகள்
அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்பதைப்பேணி
பிறர்பழிக்கும் ஆறாகாது மேற்படி வாழ்ந்த தம்பதிகளின்
வாழ்க்கையில் போனபங்குனித் திங்கள் வினைந்தது வினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைத் துணைவி நவமணியை இழந்தார் சின்னத்துரை
அன்புமனையாளின் அந்திமக் கடமைகளாற்றினார்.
அமரர் நான்கு மாதங்கள் கடந்ததின் பின்னர் எப்பவோ
விண்ணபித்து எழுதிய கடவுச்சீட்டு புத்தகம் வந்துசேர்ந்து
ஆருயிர் துணைவியைப்பிரிந்தகவலைகள் ஆறாநிலையில்
மனையாளின் மண்ணுலகப் பிரிவுகானா மக்களைக்காண
எண்ணியவேளை "நினைப்பதொன்றுநடப்பதுவேறொன்று"
என்றநிலையில்லாவுலகில்
வினைப்பயன் படி தானே யாவும் திகழ்ந்திடு முண்மையிது.

ஆண்டுநிகழ் விரோதி ஆனித்திங்கள் இருபத்தி ஏழு....
பூண்டதிதி தேய்பிறை சதுர்த்தி மாலை ஏழுமணியளவில்
ஆண்டாண்டாய் அப்பா என்றன்புடன் அழைத்தமகள்
பவாணிமேல் கொண்ட குறைவற்ற பாசமோ என்றெண்ணும் படியாக
அன்புமகள் கையால் அன்னமுண்டார் சின்னத்துரை
சற்று நேரத்தால் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்தவர்
பற்றுமிக்க மகள் பவானி மடியில் சாய்ந்தார்
சாய்ந்தவர் பெற்றமகள் உற்றவர் உறவோர் ஓங்கியழ
சதயநட்சத்திரமும் சித்தாமிர்தயோகம் சேர இறையடிசேர்ந்தார்.

மீளாத் துயில் கொண்டார் எனவறிந்த ஊரவர்
மாளாத்துயரில் மூழ்கி மனம்சோர்ந் தழுதனர்
மறுநாள் முறைப்படி கிரியைகள் நடைபெற்று
இறுதியாத்திரை நடந்து பூதவுடல் தீயினால் நீறாகியது
அமரரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிராத்திப்போமாக.
"நெருநல் எளணொருவன் இன்றில்லையென்னும்
பெருமையுடைத்திவ்வுலகு"
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிக் கவிதைகள்

## அன்புக்குரிய மக்களின் மனத்துயர் (பொது)

எங்களின் வளர்ச்சிக்காக எழில்மிகு பணிகளாற்றி
ஆருயிர் அம்மாவை அண்மையில் இழந்த போதும்
உங்களின் முகத்தைப் பார்த்து ஓரளவாறி நின்றோம்
என்னதான் செய்வோம் ஏற்றமிகு எங்கள் அப்பாவே
இங்கிதமாக எந்தவித நோயுமின்றி இன்னும் பல்லாண்டிருந்து
ஆழ்ந்தநல் அறிவுரைகள் எமக்களிப்பீர் என்றிருந்தோம்
ஈண்டுநீர் மறைந்தபோதும் எங்களின் வாழ்க்கைக்காக
பூண்டநற் சேவை எண்ணப் பொகின்றோம் கண்ணீராறு

## வெளிநாட்டில் வாழும் மக்கள்

இனந்தனைப் பிரிந்த மான்போல்
எங்கள் தாய்நாட்டை விட்டகன்று
பணம்பொருள் தேடவென்று வந்தோம்
பரிவோடு வளர்ந்தெடுத்த எங்கள்
கனந்திகழ் மாதாபிதாவின் அந்திக்காலத்து
காட்சிகள் காணாத எங்கள்
மனத்தனை வாட்டும் சோகம்
மாறுமோ பிறப்புக் கெல்லாம்

## மருமக்கள் மருவுதுயர் (பொது)

காவியமாய் நின்றவெங்கள் கருணை மாமா
கண்போல மருகரெமைக் காத்து நெஞ்சில்
ஓவியமாய் நின்றீரே உயர்ந்தே விட்டீர்
பாசமெனும் கயிற்றாலெ எமைப்பிரிந்து
ஆவிவிடும் வரையன்பாக இருந்தீரே
அய்யய்யோ எமதருமை இனியமாமா
பாவிகளாய் நாமிங்கு பரிதவித்து நின்றாலும்
அவ்வுலகில் அமலனடி சேரவேண்டுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டில் வாழும் மருமக்கள்

நன்றாக நாமெல்லாம் வாழ்வதற்கு
நல்லமரு மக்களென் றெம்மைஏற்றீர்
நின்றுபல நன்மையெல்லாம் செய்தீர்மாமா
நீவீரிவ்வுலகை விட்டகன்ற செய்திகேட்டு
ஒன்றுமே இங்கெம்மால் செய்யமுடியவில்லை
அன்புமுகமும் எண்ணிநாம் அழுதேநின்றோம்
என்றுமுங்கள் நினைவுடனெ நாமிருப்போம்
எழில்தெய்வ மெனத்தொழுவோம் இறைதான் சேர்மின்

## பேரப்பிள்ளைகள் ஆதங்கம்

அள்ளியெம்மைக் கொஞ்சிய ஆசைமுகம் அணைத்தே போச்சு
துள்ளிநாம் விளையாடத் தூக்கி அணைத்த கரங்களெங்கே?
வெள்ளை உள்ளமுள்ள மேன்மைமிகுந்த தாத்தாவே
கள்ளமில்லா உங்கள் கவின்சிரிப்பைக் காணாது அழுகின்றோம்.

## தேற்றம்

நல்லவர்கள் நெடுங்காலம் வாழ்வதில்லை
நாவல்லோர் நீழ்புவியில் நிலைப்பதில்லை
சொல்லினிலே வாய்மையுள்ளோன் இங்குவாழ
சுரும்புமலர் அணியிறைவன் விடுவதில்லை
நல்லவனாம் சின்னத்துரை எம்மை
வருந்தியழ விட்டிறைவன் பதமடைந்தான்
கொல்லையிலே இருந்தமலர் கொடுமுடிக்கு
குளிர்விக்கச் சென்றதெனத் தேறுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயுமானவர் பாடல்

நேற்றுள்ளார் இன்று மாளா நின்றனர்
அதனைக் கண்டும்
போற்றுவேன் நின்னை அந்தோ! போக்கி
வீணோ காலம்
ஆற்றிடுவேன் இன்னும்வீழ்ந் திளைக்கச்
சிறியனானேனே

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்ட
பேரினை நிக்கிப் பிண மென்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

## பட்டினத்தார் பாடல்

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீரும் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின் தாள் சதங்கச்சி ஏகம்பனே.

## வள்ளளார் திருவருட்பா

பெற்றதாய்தனை மகன் மறந்தாலும்
பிள்ளையைப் பெருந்தாய் மறந்தாலும்
உற்றதேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரைமேவிய உடல் மறந்தாலும்
கற்றநெஞ்சங் கலை மறந்தாலும்
நற்றவத்தாவர் உள்ளிருந் தோறும்
நமச்சிவாயத்தை நான் மறவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்தவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## மனிதன் மனிதனாக வாழ்வதற்கான மகத்ததான சிந்தனைச்சிதறல்.........

1. மற்றவர்க்கு எந்தவிதமான துன்னமும் செய்யாத மன உறுதியுள்ளவராக வாழ்தல்
2. தீமைகள் விலக்கி நன்மைகள் செய்தல்
3. ஆசைகளைக் குறைத்து பண்புகளால் உயர்ந்து நிற்றல்
4. சொல்லாலும், செயலாலும் எண்ணத்தாலும் தூய வாழ்வு வாழ்தல் அதாவது சொல், செயல், எண்ணம் ஆகிய மூன்றும் ஒன்றாகவிருத்தல்.
5. கோபம் கொள்ளாது அன்பையும் அறத்தையும் கடைப்பிடித்து வாழுதல்.
6. மாதா, பிதா, குரு மற்றும் பெரியோரை கனம் பண்ணுதல்
7. உண்மையைபேசி நன்மையை செய்தல் வேண்டும்.
8. தன்னுயிர் போல் ஏனைய உயிர்களையும் நேசித்தல்
9. மனத்தின் கண்மாசு அற்றவனாக மனதை ஒரு நிலைப்படுத்தி பக்குவமடைதல்
10. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் அவைகள் இல்லாது வாழுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீக வாழ்வே சிந்தைக்கு இனிதன்று
தெய்வம் தொழுபணியே சிறப்பென மறாநின்று
வையக மககட்கெல்லாம் வள்ளுவன் சொன்ன
உய்யும் நல்நெறியில் நின்றுயர்வுபட வாழ்வோமாக.

## வெற்றியின் இரகசியம்

அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே
இரக்கம்காட்டு ஆனால் ஏமாந்து போகாதே!
பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே
கண்டிப்பாயிரு ஆனால் கோபப்படாதே!
சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சனாய் இராதே
வீரனாய் இரு னோல் போக்கிரியாய் இராதே!
சுறுவுறுப்பாயிரு ஆனால் பதட்டப்படாதே
தர்மம் செய் ஆனால் ஆண்டியாகி விடாதே!
பொருளைத்தேடு ஆனால் பேராசைப்படாதே
உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறந்து விடாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது இதயம் கலந்த நன்றிகளைத் தெரிவித்து நினைவில் நிறுத்துகின்றோம்.

எங்கள் உள்ளத்தில் என்றும் நீங்காத இடம் பிடித்த அன்பு அப்பா எங்கள் குடும்ப விளக்கு அமரர் திரு.சின்னத்துரை அவர்களின் பூவுலகப் பிரிவுச் செய்திகேட்டு எமது இல்லம் நாடி ஓடி வந்து ஆறுதல் அளித்தோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்டோருக்கும் எமது நன்றிகள்.

மேலும் இவரது இறுதிக்கிரியைகளை நடாத்திய குருமார்கள் இதற்கு உதவியோர் இறுதியாத்திரையில் கலந்துகொண்டோர், சுடுகாட்டலுவல்கள் அனைத்திற்கும் உதவியோர்க்கும் இனிய நன்றிகள் இவரது அந்தியேட்டிக்கிரியைகள் இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளை நடாத்திய அந்தணருக்கும் இவற்றுக்கு உதவிய அனைவருக்கும் இன்றைய ஆத்மசாந்தி வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளிலும் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் மற்றும் இவ்வினிய மலரினை தொகுத்து ஆக்கிய ஓய்வுபெற்ற அதிபரும் ஆசிரியருமான திரு.சுக.நவரத்தினம் அவர்கட்கும் இம் மலரினை அச்சிட்டு உதவிய கொடிகாமம் சிவகஜன் அச்சகத்திற்கும் எமது இதயம் கலந்த நன்றிகளைத் தெரிவித்து நினைவில் நிறுத்துகின்றோம்.

உசன்
மிருசுவில்
*10.08.2009*


அன்புடன்
குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.



Sivaranjanam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org